**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 91/2019**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 11.02.2026 | | |
|---|---|---|---|
| பெயர்: | சவுந்தர்ராஜன் (PW–2 Cross ) | தகப்பனார் பெயர்: | உத்திராபதி |
| கிராமம்: | குச்சிபாளையம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | உணவகம் | வயது : | 56/2026 |

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 11.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்–13.47)**

1. வாதி மேல வானகிரி கிராமம் மெயின்ரோட்டில் வசித்து வருகிறார். நான் மேல வானகிரி கிராமம் குச்சிபாளையம் தெருவில் வசித்து வருகிறேன். வாதி, 1,2 பிரதிவாதிகளின் தந்தை அகோரம் எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வாதி, 1,2 பிரதிவாதிகளின் தாயார் குப்பம்மாள் எப்போது இறந்தார் என்றால் 1979ம் வருடம் இறந்தார்.

2. அகோரம் 1959ம் வருடம் சொத்துகளை பொறுத்து ஏற்பாடு செய்த விபரம் எனக்கு தெரியாது. செல்லப்பனும், பெரியநாயகியும் காலமாகி சுமார் 7,8 வருடங்கள் இருக்கலாம், தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதி ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வாரிசு சான்றிதழ் பெற்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. வாதி, செல்லப்பன், பெரியநாயகி ஆகிய வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். செல்லப்பனுக்கு ஒரு மகள் இருக்கிறார். அவர் நர்ஸாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். பெரியநாயகிக்கு 3 மகள்கள், 2

மகன்கள். பெரியநாயகியின் வாரிசுகள் காரைக்காலில் வசித்து வருகிறார்கள். செல்லப்பனின் மகள் சென்னையில் வசித்து வருகிறார்.

4. வாதி தாக்கல் செய்த வழக்கு பொய்யான வழக்கு என்றாலும், வாதிக்கு நான் நண்பர் என்ற காரணத்தால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3,4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. காலமான அண்ணாதுரைக்கு செல்லப்பன், ராமலிங்கம், ஞானகுணாலன், பெரியநாயகி, பாரதி ஆகியோர்கள் சகோதர, சகோதரிகள் ஆவார்கள். இந்த வழக்கில் ஞானகுணாலன், ராமலிங்கம், பாரதி ஆகியோர் மட்டுமே வழக்கின் தரப்பினர்களாக உள்ளார்கள் என்றால் சரிதான். செல்லப்பன் இறந்துவிட்டார். அவரது மனைவியும் இறந்துவிட்டார்.

2. செல்லப்பனுக்கு 2 மகள்கள், அதில் ஒரு மகள் இறந்துவிட்டார், மற்றொரு மகள் சென்னையில் வசித்து வருகிறார். பெரியநாயகி இறந்துவிட்டார், அவரது கணவரும் இறந்துவிட்டார். அவர்களுக்கு வாரிசுகள் உண்டு, அவர்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையின் அடிப்படையில் வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்–14.06)**